Arimā Nōkku

# அரிமா நோக்கு

5:4 சனவரி 2012

ரூ.20

ஆசிரியர்: ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
5:4 சனவரி 2012

கவிக்குயில்
- வ. ஜெயதேவன் 03
The Case Forms in Tamil and English - A Comparative Study-
- A. Rajamanickam and P. Kumeresan 05
கவிதையாக்க நோக்கில் அற இலக்கியங்கள்
- பழ. முத்துவீரப்பன் 10
Reading Comprehension Strategies and the integration of Formative Assessment—a capstone project
- Tamilarasi Subramaniam 18
பெட்டி ஃப்ரைடன் (1921-2006)
- இரா. பிரேமா 26
தொல்காப்பியரின் களவுக் கோட்பாடு
- இரா. மோகன் 30
கல்வெட்டில் ஆடவல்லான் இருக்கிறார் நடராசன் இல்லை
-சா. கந்தசாமி 37
தொல்காப்பியத்தில் பயில்வெண் ஆய்வு
- கோ. பழனிராசன் 50
உலகமயமாதலும் சிங்கப்பூரில் தமிழாசிரியர் பயிற்சியும்
-ஆ.ரா. சிவகுமாரன் 57
Human Rights: Women Education with social Change
- S. Indradevi 61
தமிழ்க் கவிஞர்கள் பணப்பாக்கம் சீத்தா, த. பழமலய் ஆகியோர் கவிதைப் படைப்பில் உவமை நயம்
- வே. பாரதி 65
Study of Stylistics and the Role of Speech Acts in Tamil - R. Krishnan & K. Karunakaran 67
மற்றும்
நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## உடன்பாட்டுக் கட்டமைப்புள் முரண்பாட்டு எதிர் அலைகள்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு, மக்கள் நலம் கருதியே தனது திட்டங்களையும் செயற்பாடுகளையும் உருவாக்கவேண்டும். இதுதான் மக்களாட்சியத்தின் மாண்பு. மக்கள் நலத்துக்கு மாறான அல்லது மேலான நாட்டு நலம் என்றோ அரசு நலம் என்றோ ஒன்று இருக்க வாய்ப்பில்லை.

தொழில் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம், உலக அரங்கில் மற்ற நாடுகளோடு சமநிலை பெறுதல் அல்லது முந்தி முதல் நிலை பெறுதல் என்கிற கோணங்களில் எல்லாம் ஓர் அரசு முனைந்து செயற்பட முற்படுகையில், மக்களாட்சியத்தின் உயிர்ப்பு நிலையாக உள்ள மக்களின் வாழ்வுநிலைச் சிதைப்பு, வாழ்வு ஆதாரப் பறிப்பு என்பன ஏற்படக் கூடாது என்னும் எச்சரிக்கையும் கவனமும் நிச்சயம்தேவை.

ஒரு திட்டம் நிறைவேற்றப்பட்டால் நாட்டுக்கு நல்லது என்கிற கண்ணோட்டத்தில் மக்கள் மீது அதனைத் திணிப்பது விரும்பத்தகா விளைவுகளையே ஏற்படுத்தும். எடுத்துக்காட்டாக, கூடன் கூளம் அணு மின் நிலையம் தேவை என்பதற்கான காரணங்களை இந்திய அரசு வைத்திருப்பதுபோலவே, தேவையில்லை என்பதற்கான காரணங்களை அதனை எதிர்க்கும் மக்கள் இயக்கமும் வைத்திருப்பதைச் சுட்டிக் காட்டலாம். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தின் திட்டத்தை அம்மக்களே இயக்கமாகச் சேர்ந்து எதிர்ப்பது, மக்களாட்சியத்தின் அடர்த்தியான ஓர் அரசியல் முரண் காட்சியாக இருக்கிறது. மக்கள் விருப்பத்தின் அடிப்படையில் மக்களாட்சியக் கோட்பாட்டு வழியில் ஒரு திட்டம் கொண்டுவரப்படும் எனில், மக்களால் எதிர்க்கப்படும் நிலை ஏற்படாதென்று சொல்லலாம்.

கூடன்குளம் அணுமின் நிலையத்தை உருவாக்கக்கூடாது என்று மக்கள் எதிர்ப்புக் கிளம்பியவுடன், மையஅரசு, தான் எதிர்பார்க்கும் முடிவுகளைச் சொல்ல வல்லதாக உள்ள ஆய்வுக்குழுவை அமைத்துச் செயல்படத்துணிகிறது. மக்கள், அக்குழுவின் கருத்துகளை, அரசு சாரா நடுவுநிலைக் கருத்துக்கள் என ஏற்றுக்கொள்வர் என்று கருதுகிறது. அரசியல் கட்சிகளில், தனக்கு ஆதரவான கட்சிகளோடு சேர்ந்து, மக்களுக்கு எதிராக ஒரு கூட்டணி அமைக்கவும் முற்படுகிறது; தன் கருத்துக்களை எடுத்து மொழிந்து மக்களை நம்பவைக்க, அரசை ஆதரிக்கும் அறிவியல் வல்லுநர்களையும், பேராசிரியர்களையும், பெரும் பெரும் பதவிகளில் இருந்து மக்களிடம் நற்பெயர் பெற்றவர்களையும் ஓரணிப்படுத்துகிறது அரசு.

மக்கள் இயக்கத்திலும், விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், சமூகநல ஆர்வலர்கள் எனப் பலர் அரசுக்கு எதிரான நிகர்நிலை அணியை வலுப்படுத்தத் திரள்கின்றனர். மக்கள் விஞ்ஞானிகள், அரசு விஞ்ஞானிகள் எனப்பிரிந்து மாறுபட்ட கருத்துக்களை முன்வைக்கும் நிலையை உருவாக்கும் அரசியல். எப்படி மக்களாட்சியத்தின் மாண்பு உணர்ந்ததாக இருக்கமுடியும்?

அறிவியல் உண்மைகள், அரசியல் வகுக்கும் விதிப்படி அமையும் எனில், அத்தகைய அறிவியலின் ஊழியம் அரசு சார்ந்திருப்பதாகக் கருதலாமே அன்றி, அது மக்கள் சார்ந்தது என்று எப்படிச் சொல்லமுடியும்? ஊடகங்கள் வாயிலாக, மக்களுக்கு மூளைச் சலவை செய்ய, அரசாங்கம் அறிவியலாளர்கள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள் அல்லது சொன்னதையே திருப்பிச் சொல்லப் பணிக்கப்பட்ட மக்கள் தொகுப்பில் உள்ள சிலர், நாட்டின் முன்னைப் பிரபலங்கள் ஆகியோரைப் பயன்படுத்துவதைப் பார்க்கும்போது அரசு, மக்கள் ஆதரவு இழந்த ஒன்றை நிறைவேற்றத் துடிப்பதாகவே தோன்றுகிறது.

இத்தகைய திட்டங்களை வகுக்கும் முன் அல்லது நடைமுறைப்படுத்தும் முன் அரசு நேரடியாக மக்களிடம் ஒரு கருத்துக்கேட்பை நிகழ்த்தவேண்டும். மக்கள் தங்களுக்கு நலம் தரும் ஒரு திட்டத்தை எக்காரணம் கொண்டும் வெறுக்கமாட்டார்கள். மீண்டும் சொல்வோம்; மக்கள், தாங்கள் எதிர்க்க வேண்டும் என்பதற்காகத் தாமே வாக்களித்து ஓர் அரசை அமைக்க மாட்டார்கள். ♦


*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் ச. அரங்கராசன்

*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்



# கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 15, 000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. | 10, 000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 3, 000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. | 1, 500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*



அரிமா நோக்கு
# 259, 4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www.arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com
செல்: 9380626448